**விழுப்புரம் மாவட்டம், கோட்டக்குப்பம் தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் தலைமையில் நடைபெற்ற 17.12.2021ம் தேதிய அவசரக்கூட்டத்தில் 01,02,03ம் எண்ணுள்ள தீர்மானத்தின் உண்மை நகல்**

**பொருள்எண்.01**

அரசாணை நிலை எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.11.2021ன்படி விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ள அரசாணையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண். 01**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.02**

அரசாணை நிலை (நிலை) எண்.127, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.16.12.2021ன்படி விழுப்புரம் மாவட்டம், கோட்டக்குப்பம் நகராட்சிக்கு 27 வார்டுகள் என நிர்ணயம் செய்து வரப்பெற்றுள்ள அரசு ஆணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.02**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.03**

அரசாணை நிலை (நிலை) எண்.127 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.16.12.2021ல் கோட்டக்குப்பம் நகராட்சிக்கு 27 வார்டுகள் என நிர்ணயம் செய்துள்ளதன் அடிப்படையில் வார்டு எல்லை மறுவரையறை கருத்துரு சமர்ப்பிக்க அறிவுறுத்தியுள்ளவாறு இந்நகராட்சியின் 27 வார்டுகளுக்கான வார்டு எல்லை மறுவரையறை செய்ய கருத்துருக்கள் தயார் செய்யப்பட்டுள்ளது.

இதனை தமிழ்நாடு மாநில மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு உரிய வழிமுறையாக சமர்ப்பிக்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

27 வார்டுகளுக்கு வார்டு எல்லைகள் மறுவரையறை கருத்துரு சமர்ப்பிக்க ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்.03**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(ஒம்)/ மு.பானுமதி
ஆணையாளர்,
கோட்டக்குப்பம் நகராட்சி
விழுப்புரம்மாவட்டம்

// உண்மை நகல்//

ஆணையாளர்
கோட்டக்குப்பம் நகராட்சி
விழுப்புரம்மாவட்டம்

**விழுப்புரம் மாவட்டம், கோட்டக்குப்பம் நகராட்சியின் தனி அலுவலர் மற்றும் ஆணையர் தலைமையில் நடைபெற்ற 27.12.2021ம் தேதிய அவசரக்கூட்டத்தில் 04,05ம் எண்ணுள்ள தீர்மானத்தின் உண்மை நகல்**

**பொருள்எண்.01**

கோட்டக்குப்பம் பேரூராட்சியை இணைத்து நகராட்சியாக அரசாணை எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021ன்படி அரசாணை வெளியிடப்பட்டது. மேற்கண்ட பேரூராட்சியை 2–ம்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் நகர்புற உள்ளாட்சி தேர்தலுக்காக வார்டு எல்லை மறுவரையறை பணிகளை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் வார்டு மறுவரையறை ஒழுங்குமுறை விதிகள் 2017ன்படி வார்டுகள் மறுவரையறை செய்வதற்கான கொள்கைகள் மற்றும் அளவுகோலின்படி கோட்டக்குப்பம் நகராட்சியின் 2011ம் ஆண்டு மக்கள் தொகை 31726 ன் அடிப்படையில் 27 வார்டுகள் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டு, ஒவ்வொரு வார்டிலும் மக்கள் தொகை ஒரே சீராக இருக்கும் வகையில் வார்டுகளின் எல்லைகள் மறுவரையறை செய்யப்பட்டது. மேற்கண்டவாறு மறுவரையறை செய்யப்பட்ட முன்மொழிவு மாவட்ட மறுவரையறை அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் விழுப்பும் மாவட்டம் அவர்களின் பரிந்துரையுடன் தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உறுப்பினர் செயலர் மறுவரையறை ஆணையம் தமிழ்நாடு அவர்களின் கடிதம் ந.க.எண்.பிசி3/5439/2021 நாள்.17.12.2021ன்படி மறுவரையறை ஆணையத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேற்கண்ட கருத்துரு பொது மக் கள் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்களின் ஆட்சேபணைகள் மற்றும் பரிந்துரைகள் அளிப்பதற்கு ஏதுவாக வெளியீடு செய்யப்பட்டது. வரைவு வார்டு மறுவரையறை தொடர்பான மண்டல கருத்து கேட்பு கூட்டம் நாள்.24.12.2021 அன்று தமிழ்நாடு மாநில வார்டு மறுவரையறை தலைவர் அவர்கள் தலைமையில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்களில் வைத்து நடைபெற்றது. அக்கூட்டத்தில் அளிக்கப்பட்ட ஆட்சேபணைகள்/கருத்துக்கள் அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து மேற்கண்டவாறு பெறப்பட்ட 33 மனுக்களில் தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்தின் விதிமுறைகளின்படி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுகூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு 18 மனுக்கள் நிராகரிக்கப்பட்டது. 4 மனுக்கள் இதர அலுவலகத்தை சார்ந்து 11 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு சரிசெய்யப்பட்டது. மேற்கண்ட ஆய்வுக் கூட்டத்தின் போது ஏற்கனவே பெறப்பட்ட மனுக்களின் மீது எடுக்கப்பட்ட முடிவுகளின்படி இறுதி வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது மேற்கண்ட கருத்துருவினை உரிய வழிமுறையாக தமிழ்நாடு

மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

பதிவு செய்யலாம்

**<u>தீர்மான எண்.04</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள்எண்.02</u>**

கோட்டக்குப்பம் பேரூராட்சியை அரசாணை எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021ன்படி நகராட்சியாக தரம் உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது. மேற்கண்ட பேரூராட்சியை 2–ம்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் நகர்புற உள்ளாட்சி தேர்தலுக்காக வார்டு மறுவரையறை பணிகளை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் வார்டு மறுவரையறை ஒழுங்குமுறை விதிகள் 2017ன்படி வார்டுகள் மறுவரையறை செய்வதற்கான கொள்கைகள் மற்றும் அளவுகோலின்படி கோட்டக்குப்பம் நகராட்சியை 27 வார்டுகள் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டு, வார்டு மறுவரையறை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வார்டு மறுவரையறை பணிகளுக்கு ஏற்படும் செலவினங்களை இந்நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

பதிவு செய்யலாம்

**<u>தீர்மான எண்.05</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

(ஒம்)/ மு.பானுமதி
ஆணையாளர்,
கோட்டக்குப்பம் நகராட்சி
விழுப்புரம்மாவட்டம்

// உண்மை நகல்//

ஆணையாளர்
கோட்டக்குப்பம் நகராட்சி
விழுப்புரம்மாவட்டம்

**விழுப்புரம் மாவட்டம், கோட்டக்குப்பம் நகராட்சியின் தனி அலுவலர் மற்றும் ஆணையர் தலைமையில் நடைபெற்ற 30.12.2021ம் தேதிய சாதாரணக்கூட்டத்தில் 06,07,08,09,10ம் எண்ணுள்ள தீர்மானத்தின் உண்மை நகல்**

**பொருள்எண்.01**

இந்நராட்சி கடற்கரை கொண்ட பகுதியாக உள்ளதால் தெரு விளக்குகள் உப்புகாற்றில் செறிக்கப்பட்டு தெருமின் விளக்குகள் அடிக்கடி பழுது அடைந்து விடுகிறது. மேலும் இப்பகுதி முழுவதும் தென்னை மரங்கள் நிறைந்த பகுதியில் இருந்து தான் மின்பாதை செல்கிறது. அதிக காற்று வீசும் போது தென்னை மட்டைகள் மின்பாதையில் விழுந்து உயர் மின் அழுத்தம் ஏற்பட்டு மின்விளக்குகள் அடிக்கடி பழுது ஏற்பட்டு இப்பகுதி முழுவதும் இருளாக காட்சியளிக்கிறது என பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. இந்நகராட்சியில் சோடியம் ஆவி விளக்குகள்–40, 4"குழல் விளக்குகள் – 70, உயர் கோபுர விளக்குகள்–18, CFL மின்சேம விளக்குகள்– 1193, LED–300, சோலார் High Mast–2, ஆக மொத்தம்–1623 மின் விளக்குகள் உள்ளன. தற்போது உலகளாவிய கொடிய நோயான கொரோனா வைரஸ் நோய் தொற்று காரணமாக ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ளதால் இரவு நேரங்களில் பொது மக்களின் நலன் கருதி எவ்வித அசாதாரன சூழ்நிலை ஏற்படாத வகையில் அனைத்து பகுதியிலும் தெருமின் விளக்குகள் ஒளிரவிட வேண்டிய அவசர சூழ்நிலை உள்ளது. எனவே இந்நகராட்சி பகுதியில் தெருமின் விளக்கு 100% ஒளிரவிடும் வகையில் பழுதாகி உள்ள அனைத்து தெருமின் விளக்குகளையும் சரி செய்யும் பொருட்டு 2021–22ம் ஆண்டிற்கு தெருமின் விளக்கு உதிரிபாகங்கள், பொருட்களை சப்ளை செய்ய தனி அலுவலர் தீர்மான எண்.519, நாள்.25.02.2021 அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்விலைவிகித்திலேயே மேற்குரிய அத்தியாவசிய பொருட்களை 31.03.2022 வரை இந்நகராட்சியின் பொது நிதியில் கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்

**தீர்மான எண்.06**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள்எண்.02**

இந்நகராட்சி 9.59சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பகுதியாகும் 80.780 கி.மீ நீளத்தில் சாலைகள் உள்ளது. அதில் 180கி.மீ நீளத்தில் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. (Main - 50.00 + Distribution - 130) மேலும் 14 OHT, 3 Sump, 23 மின்மோட்டார் மற்றும் 250 பொதுக்குழாய்கள் உள்ளது. இப்பேரூராட்சி பகுதியில் இருவேளை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தெருக்களில் இருபுறம் பைப்லைன் அமைக்கப்பட்டு உள்ளது. இதனால் அடிக்கடி பைப்லைன் உடைப்பு ஏற்படுகிறது. எனவே குடிநீர் சரி செய்யும் பொருட்டு குடிநீர் விநியோகத்திற்கு தேவையான

பொருட்களை சப்ளை செய்ய 2021–22ம் ஆண்டிற்கு உதிரிபொருட்களை சப்ளை செய்ய தனி அலுவலர் தீர்மான எண்.519, நாள்.25.02.2021 அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்விலைவிகித்திலேயே மேற்குரிய அத்தியாவசிய பொருட்களை 31.03.2022 வரை இந்நகராட்சியின் பொது நிதியில் கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்

**தீர்மான எண்.07**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள்எண்.03**

இந்நகராட்சி 9.59சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பகுதியாகும் 80.780 கி.மீ நீளத்தில் சாலைகள் உள்ளது. அதில் 180கி.மீ நீளத்தில் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. (Main-50.00 + Distribution - 130) மேலும் 14 OHT, 3 Sump, 23 மின்மோட்டார் மற்றும் 250 பொதுக்குழாய்கள் உள்ளது. இப்பேரூராட்சி பகுதியில் இருவேளை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தெருக்களில் இருபுறம் பைப்லைன் அமைக்கப்பட்டு உள்ளது. மேலும் மின்தடைபடும் நேரங்களில் ஜெனரேட்டர் கொண்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு மின்மோட்டார் மற்றும் ஜெனரேட்டர் பழுது எற்பட்டால் அவற்றை சரிசெய்யும் பொருட்டு மின்மோட்டார் மற்றும் ஜெனரேட்டர் பழுது சரி செய்ய 2021–22ம் ஆண்டிற்கு உதிரிபொருட்களை சப்ளை செய்ய தனி அலுவலர் தீர்மான எண்.519, நாள்.25.02.2021 அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்விலைவிகித்திலேயே மேற்குரிய அத்தியாவசிய பொருட்களை 31.03.2022 வரை இந்நகராட்சியின் பொது நிதியில் கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்

**தீர்மான எண்.08**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள்எண்.04**

கோட்டக்குப்பம் நகராட்சியில் 2021–22ம் ஆண்டிற்கு பொது சுகாதார பணிக்கு தேவையான பொருட்களான பினாயில், பீளிச்சிங்பவுடர், சுண்ணாம்பு, குளோரின், கொசுமருந்து மற்றும் கோவிட்–19க்கு தேவையான பொருட்கள் போன்றவற்றை சப்ளை செய்ய தனி அலுவலர் தீர்மான எண்.519, நாள்.25.02.2021 அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்விலைவிகித்திலேயே மேற்குரிய அத்தியாவசிய பொருட்களை 31.03.2022 வரை இந்நகராட்சியின் பொது நிதியில் கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்

**<u>தீர்மான எண்.09</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள்எண்.05</u>**

கோட்டக்குப்பம் நகராட்சியில் குடிநீர் பைப்லைன் உடைப்பு மற்றும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய தனி அலுவலர் தீர்மான எண்.519, நாள்.25.02.2021 அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்விலைவிகிதத்திலேயே குடிநீர் பைப்லைன் உடைப்பு மற்றும் பழுதுகளை சரிசெய்து ஒப்பந்தார்ருக் 31.03.2022 வரை இந்நகராட்சியின் பொது நிதியில் தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

பதிவு செய்யலாம்

**<u>தீர்மான எண்.10</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

(ஒம்)/ மு.பானுமதி
ஆணையாளர்,
கோட்டக்குப்பம் நகராட்சி
விழுப்புரம்மாவட்டம்

// உண்மை நகல்//

ஆணையாளர்
கோட்டக்குப்பம் நகராட்சி
விழுப்புரம்மாவட்டம்